

22
சித்திரை
ஏப்ரல் - ஜூன் 2017

மலர் 6 இதழ் 2

KAAVYA TAMIL ISSN 2277 - 9221
விலை ₹ 100

# காவ்யா தமிழ்

கலை, இலக்கியம், பண்பாட்டு பன்னாட்டுக் காலாண்டிதழ்



சுந்தரபாண்டியனின்
**தீப்பாஞ்ச அம்மன்கள்** நாடகம்

லலிதாம்பிகை அந்தர்ஜனத்தின்
**பழிவாங்கும் தேவதை** சிறுகதை (மலையாளம்)
தமிழில்: ஏ.எம்.சாலன்

பா.விசாலம் தொடர் கட்டுரை
**தந்தைவழிக் குடும்பம் எனும் சாபக்கேடு**

கழனியூரனின்
**பிராயிலர் மனிதர்கள்**

25 ஆய்வுக்கட்டுரைகள் மற்றும்
4 கவிதைகள்

பேரா.சு.சண்முகசுந்தரத்தின்
**ஜல்லிக்கட்டு: தமிழ் சினிமாவும் அரசியலும்**





# அடித்தள மக்கள் உணவும் ஆவ்ஷ் கொலையும்:

## வாய்மொழி வரலாறு வழிக் கட்டமைத்தல்


முனைவர் ச. சீனிவாசன்


**மக்கள் பயன்பாட்டில் மாட்டுக்கறி எனும் புலால் உணவு:**

வேத காலச் சமூகச் சடங்குகளில் மாடுகள் பலியிடப்பட்டதற்கும், உணவாகப் பயன்படுத்தப் பட்டதற்குமான வரலாறு மற்றும் இலக்கியப் பதிவுகள் ஏராளம் காணக் கிடைக்கின்றன. ரிஷிகள், முனிவர்களின் விருந்துகளில் புலால் உணவு பெரும்பங்கை வகித்ததாக ராகுல சாங்கிருத்தியாயன் எழுதியுள்ளார்.

"விருந்தினர்களை உபசரிக்கும் சடங்கான ஆர்கியம் அல்லது மதுபர்கம் என்று மிகப் பிரபலமாக அழைக்கப்பட்ட ஒரு ஆர்வத்திற்குரிய சடங்கு குறித்துப் பிற்கால வேத நூல்கள் அடிக்கடி குறிப்பிடுகின்றன. விருந்தினர்களைக் கவுரவிக்க பசுக்களைக் கொல்லும் நடைமுறை பண்டைக் காலத்திலிருந்தே இருப்பதாகத் தெரிகிறது. 'விருந்துக்குப் பொருத்தமான பசுக்கள்' என்ற பொருள் தரும் அதிதினிர்(Athithinir) என்ற சொல் ரிக் வேதத்தில் (X-68.3) காணப்படுகிறது. திருமண விழாவின்போது பசு பலிதரப்பட்டது குறித்து ரிக்வேதப் பாடல் ஒன்று குறிப்பிடுகிறது. ஆட்சியாளர்களோ, மரியாதைக்குரியவர்களோ விருந்தினார்களாக வந்தால், மக்கள் காளைகளையோ, பசுவையோ பலிதந்தார்கள் என்று அய்த்தரேய பிராமணத்தில் சொல்லப்பட்டுள்ளது (III.4. மேற்கோள்: டி.என்.ஜா. 2003: 31)

வேத காலத்தில் மக்கள் மாட்டிறைச்சியை முக்கிய உணவாகவும், மதிப்பிற்குரிய உணவாகவும் கருதி உண்டு வந்ததையும்; மாட்டிறைச்சி இந்தியர்களின் உணவுப் பழக்கங்களில் ஒரு பகுதியாக இருந்தது என்பதையும் 'புனிதப்பசு எனும் கட்டுக்கதை' என்ற நூல் பதிவு செய்துள்ளது. இசுலாம் இந்தியாவுக்கு வருவதற்கு வெகு காலம் முன்பிருந்தே நமது முன்னோர்கள் மாட்டிறைச்சி சாப்பிட்டு வந்தார்கள் என்பதை மேற்குறித்த நூலில் ஆசிரியர் டி.ஏன். ஜா நிறுவியிருக்கிறார்.


தமிழ் இணைப்பேராசிரியர், ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்லூரி (தில்லிப் பல்கலைக்கழகம்), புது தில்லி-110 021